Story of the Cat & the fox

1st Copy

கேள்வி 10.

பதில்: பம்பைக்காரன் சொன்ன பூனை, நரி கதையை நான் நன்றாக படித்துப்பார்த்தேன். அந்தக் கதைக்கும், நரிக்குறவர்களுக்கும் சிறிது கூட தொடர்பு (சம்மந்தம்) இருப்பதாக தெரியவில்லை. ஆகையால், நரிக்குறவர்களுக்கும் அந்தக்கதைக்கும் சம்மந்தம் இல்லையென்றே நான் நினைக்கிறேன்.

கதையின் கடைசிக் கட்டத்தில் "நரிகள் எல்லாம் காட்டில் வசிப்பதால் அவைகளை நரி ராஜாக்கூட்டம்! என்று சொல்வார்கள்" என்று பம்பைக்காரன் சொல்லியுள்ளான்.
அடுத்ததாக "அந்த நரி ராஜா கூட்டத்திற்கு இப்பொழுது குறவருடைய கூட்டம்" என்று பெயர் உள்ளதாக பம்பைக்காரன் சொல்லியுள்ளான்.

ஆனால், அதுபற்றி நான் நினைப்பது என்னவென்றால் இப்பொழுதும் ஒருகாட்டில் நரிகள் நிறைய இருந்தால் அவைகளை நரிக்கூட்டம் என்றுதான் ஜனங்கள் சொல்வார்களே அல்லாமல் குறவருடைய கூட்டமென்றோ, நரி ராஜாக்கூட்டமென்றோ ஜனங்கள் சொல்வதில்லை.

மற்றபடி நரிக்குறவர்கள் என்று சொல்வது அவர்கள் ஒரு விதக் குறவர் ஜாதியாக இருக்கலாம். அவர்கள் நரியைப் பிடித்து தின்பதால் (சாப்பிடுவதால்) நரிக்குறவர் என்று பெயர் வந்திருக்கலாம். தவிர குறவர்களுக்கும், நரிகளுக்கும் வேறு சம்மந்தம் இருக்குமென்று சொல்ல முடியாது.

மற்றும் சில குறவர்கள் ஊருக்குள் வீடுகளில் வளரும் வீட்டுப் பூனைகளை பிடித்து சமைத்து சாப்பிடுவார்கள். அவர்களை "பூனைகுத்திக் குறவர்கள்" என்று ஜனங்கள் சொல்வார்கள்.

அவர்கள் பூனைகளை சாப்பிடுவதால் அவர்களுக்கும், பூனைக்கும் சம்மந்தம் இருக்கிறது என்று சொல்ல முடியாது.

ஆகையால் பம்பைக்காரன் சொன்ன பூனை, நரி கதைக்கும் குறவர்களுக்கும் சம்மந்தமில்லையென்று நான் சொல்கிறேன். அதுபற்றி நீங்கள் (பிருந்தா) யோசனை செய்ய வேண்டாம்.

20/9/67.

பம்பைக்காரன் சொன்னபூனை, நரி கதையை நீங்கள் படிப்பதற்காக சுருக்கமாகவும், சுத்தமாகவும், கதையை சிறிதாக எழுதியுள்ளேன் படியுங்கள்.

கதை: ஒரு வீட்டிலிருந்த பூனையொன்று காட்டுக்குள் சென்றது. அந்தக் காட்டுக்குள் ஒரு நரி உட்கார்ந்திருந்தது. அந்த நரியானது பூனையைக்கண்டதும் "பூனையண்ணே, பூனையண்ணே! உனக்கு வீட்டில் (ஊரில் உள்ள வீடுகளில்) பால் இருக்கிறது, தயிர் இருக்கிறது, மோர் இருக்கிறது! நீ அந்த சாப்பாடுகளை சாப்பிடுகிறாய். நான் ஊருக்குள் வந்தால் ஊருச் சனங்கள் எல்லாம் தடியை எடுத்துக்கிட்டு வந்து என்னை துரத்தி அடிக்கி விடுவார்கள். நான் காட்டுக்குகே திரும்பி ஓடிப்போக வேண்டியதுதான் இந்த சாப்பாடெல்லாம் எனக்கு கிடைக்காது!" என்று நரி சொல்லியது.

அதற்கு இந்தப்பூனை அண்ணே, நரியண்ணே நரியண்ணே! நீ பொழுது விழுந்து (சூரியன் மறைந்த பின்) வீட்டுப் பொடக்காளியின் (வீட்டின் பின்புறம் காலி இடம்) உள்ளே வந்து போருக்குள்ளே (சோளத்தட்டு, கம்மந்தட்டு ஆகிய மாடு தின் பண்டங்களின் இருப்பிடம்) வந்து பதுங்கிரு! நான் வந்து உன்னை வீட்டுக்குள்ளே கூட்டிக் கொண்டு போயி உனக்கு வேண்டிய சாப்பாடெல்லாம் போடுகிறேன். நீ நல்லா சாப்பிட்டு விட்டு அதற்குபின் காட்டுக்குப் போய் விடலாம் என்று பூனை சொல்லியது. பிறகு, இந்தப்-பூனை வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டது.

இந்த நரியானது ஒரு கரட்டுக்குச் (சிறுமலை) சென்று தண்ணீரில் குளித்து, ஆடையாபரணங்கள் (துணிகளும், நகைகளும்) எல்லாம் உடுத்தி. சந்தனம், ஜவ்வாதுகள் எல்லாம் உடம்புக்கு பூசிக் கொண்டு அன்று சூரியன் மறைந்து இருட்டியவுடன் சுமார் ஆறு மணிக்கு புறப்பட்டு பூனையிருக்கிற வீட்டுக்குச் சென்று பூனை சொல்லியபடி பொடக்காளியில் உள்ள போருப்பட்டிக்குள் போயி

படுத்துக் கொண்டது.

நரியை அனுப்பிவிட்டு வீட்டுக்கு திரும்பி வந்த பூனை யானது பக்கத்து வீடுகளுக்குச் சென்று பால், தயிரு, மோரு, பலகாரங்கள் இவைகள் எல்லாம் எடுத்து வந்து வைத்து விட்டு; ஒரு நாடார் வீட்டுக்குச் சென்று ஒரு கும்பத்து நிறைய கள்ளுத்தண்ணி (கள்) எடுத்துக்-கொண்டு வந்து வைத்து விட்டு பொழுது விழுந்ததும் பொடக்காளிக்குள்ளே போயி பொடப்பட்டிக்குள் பார்க்கும் போது நரி படுத்துக் கொண்டிருந்தது.

நரியைக் கண்ட பூனையானது "நரியண்ணே, வாண்ணே! இன்னைக்கு உனக்கு நல்ல விருந்து! (சாப்பாடு) என்று நரியை வீட்டுக்-குள் கூட்டிப் போயி நரியை அட்டாலிமேல் உட்கார வைத்து விட்டு பால், பழம், தயிரு, மோரு, தேங்காய் இப்படி யாக அந்த வீட்டில் என்னவெல்லாம் இருக்கிறதோ அவைகளை எல்லாம் கொண்டு வந்து நரியின் முன் இலைபோட்டு சாப்பாடுகளையெல்லாம் இலைமேல் வைத்து, நல்லா சாப்பிடு அண்ணே! நீ, எங்கே போனே, எங்கே வாரே?" என்று பூனை சொன்னது.

அதுக்கு நரியானது "ஆமாண்ணே, பூனையண்ணே! உன்னைப்-போல் நான் வீட்டில் இருந்து பழக்கமிருந்தால் எனக்கும் இப்படி சாப்பாடு கிடைக்கும்! நான் இங்கிருப்பது இப்பொ ஜனங்கள் கண்டாலும் தடியை எடுத்துக்கிட்டு என்னை துரத்தி முடுக்கி விடுவார்களே, நான் ஓட வேண்டியது தானே?" என்று நரி சொல்லியது.

அதுக்கு பூனையானது "அண்ணே, அண்ணே! இப்போது அதையெல்லாம் பேசாதே! வயிறு நிறைய சாப்பிடுகிற வேலையைப் பாரண்ணே! நரியண்ணே" என்று பூனை சொல்லியது.

நரியானது நன்றாக சாப்பிட்டு முடிந்ததும் நரி ஒரு விட்டத்தின் மேலும், பூனை ஒரு விட்டத்தின் மேலும் உட்கார்ந்து கொண்டார்கள்.

அப்பொழுது பூனையானது நரியை நோக்கி "அண்ணே, நரியண்ணே! நீ, போதை வஸ்துவான (கள் சாராயம்)

சாமானங்கள் சாப்பிட்டிருக்கிறீயண்ணே?" என்று கேட்டது. அதற்கு அந்த நரியானது "ஆமாண்ணே! மதனம் (போதை வஸ்து) சாப்பிட்டு ரொம்ப நாளாகுது! அதை சாப்பிட்டா போதை வருமா? சரி சாப்பாடெல்லாம் எனக்கு நிறையக் கொடுத்தாய் இப்போ அதுவும் (கள்ளு, சாராயம்) கொஞ்சம் கொண்டாந்து இடு அண்ணே!" என்று நரி கேட்டது.

அதைக் கேட்டதும் பூனையானது மறுபடியும் போயி கள்ளு, சாராயம், கஞ்சா இவைகள் எல்லாம் கொண்டு வந்து விட்டத்தின் மேல்வைத்து நரியை நோக்கி "சாப்பிடண்ணே!" என்று பூனை சொன்னது.

கள்ளு, சாராயம், கஞ்சா இந்த மூன்று சாமானத்தையும் நரி சாப்பிடவும் நரிக்கு போதை வந்துவிட்டது. போதை வந்ததும் பூனையை நோக்கி "பூனையண்ணே, பூனையண்ணே! நான் ஒரு நாள் கூட இவ்வளவு சந்தோஷமா இருக்கவில்லை. எனக்கு கொஞ்சம் பாட்டு வருதண்ணே!" என்று நரி சொல்லவும். அதற்கு பூனையானது "நரீன்னு சொன்னு உன்னை ஜனங்கள் எல்லாம் அடித்துத் துரத்துவாங்க! அப்படியிருக்க நீ பாட்டுப் பாடுகிறேன் என்று சொல்கிறாயே? என்னமோ நான் சொல்வதை கேட்டாக்கேளு! விட்டா விடு! இப்போ நீ பாட்டும் பாடினால் இந்த ஊரு ஜனங்கள் எல்லாம் வந்து வீட்டைச் சுற்றியும் நின்று உன்னை அடித்து துரத்துவார்கள். அதனால், உனக்குத்தான் கஷ்டம்! நான் தப்பித்துக் கொண்டு இந்த வீட்டை விட்டு வேறு வீட்டுக்கு ஓடிப் போய் விடுவேன்" என்று பூனை சொன்னது.

பூனை சொன்னதை நரி கேட்காமல் விட்டத்தில் நல்லா படுத்துக் கொண்டு உக்கே! உக்கே! உக்கென்று (நரி கத்துவது) சத்தம் போட ஆரம்பித்தது.

நரி போட்ட சத்தம் ஊரு ஜனங்கள் கேட்டு "ஊருக்குள் நரி பூந்துவிட்டது" என்று ஆளுக்கு கொரு தடியை எடுத்துக் கொண்டு வந்து நரி சத்தம் போட்ட வீட்டை தடிகளால் இடித்து வீட்டை பிரித்து பார்க்கிற போது நரி செத்துப் போனதுபோல் தந்திரமாக விட்டத்தின் மேல் படுத்திருந்தது! அதைக்கண்ட ஊரு ஜனங்கள் எல்லோரும் இந்த நரியை வீட்டுக்குள் கூட்டி வந்தது யாரு?

இந்த பூனையண்ணன் செய்த வேலையாகத்தான் இருக்கும்!" என்று ஊருக்குள் சென்று பூனையைத் தேடி பிடித்துக் கொண்டுவந்து "அண்ணே, பூனையண்ணே! இந்த நரியை வீட்டுக்குள் கூட்டிவந்தது யாரு?" என்று ஊர் ஜனங்கள் பூனையைக் கேட்டார்கள்.

அதற்கு பூனையானது "நான்தான் அவனைக் கூட்டி வந்து வைத்தேன். அவன் பேச்சைக் கேட்டு நானும் கெட்டேன்! என் பேச்சைக் கேட்டு அவனும் கெட்டுப்போய் விட்டான். சரி, அதுதான் செத்துப் போய்விட்டதே? இனி விட்டுருங்க போகட்டும்!" என்று பூனை சொல்லியது.

அதைக் கேட்ட ஊர் ஜனங்கள் எல்லோரும் அவரவர்கள் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

அவர்கள் எல்லாம் போனபின் நரி எழுந்து காட்டுக்கு ஓடியது. காட்டுக்குப் போக அங்கிருந்த மற்ற நரிகள் எல்லாம் "அடே! இவன் எங்கயோ போயி நல்லா சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறான்" அப்பிடீன்னு இந்த நரிகள் எல்லாம் வீட்டுக்குப் போய்விட்டு வந்த ~~[illegible]~~ நரியிடம் சென்றதுகள். இவர்களைக் கண்டதும் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வந்த நரியானது "அண்ணே! வீடெல்லாம் தயிர் இருக்குது! மோர் இருக்குது! கள், சாராயமிருக்குது! நாளைக்கி பொழுது விழுந்ததும் நீங்கள் எல்லோரும் ஊருக்குள்ளே போயி வீட்டுக் கொரு ஆள் போயி சாப்பிட்டுப் பாருங்க!" என்று இந்த நரி சொல்லியது.

அதைக் கேட்ட இந்த நரிகள் எல்லாம் மறுநாள் பொழுது விழுந்து மறைந்ததும் எல்லா நரிகளும் ஊருக்குள் சென்றது. இந்த நரிகள் வந்ததை பூனையானது பார்த்து நரிகளை நோக்கி "நேற்று ஒரு நரியண்ணன் வந்தான் அவன் எல்லா நரிகளுக்கும் நான் வேணாவின்னு சொன்னேன். அவன் இங்கு வந்து ரொம்பவும் கஸ்டப்பட்டுப் போனான். ஆகையால், நீங்கள் ஒருவரும் இங்கு இருக்க வேண்டாம் திரும்பி காட்டுக்கே போயிருங்கப்பா!" என்று பூனை சொல்லியது.

பூனை சொன்னதைக் கேட்ட நரிகள் எல்லாம் ஊருக்குள்

சென்று கொஞ்சம் சாப்பாடெல்லாம் எடுத்துக் கொண்டு திரும்பி காட்டுக்குள் சென்று ஒரு இடத்தில் எல்லா நரிகளும் கூட்டமாக உட்கார்ந்து கொண்டது. அதில் ஒரு நரியானது மற்ற நரிகளை நோக்கி "அண்ணே, அண்ணே! இந்த சாப்பாடுகள் நாமும் கொண்டு வந்திருக்கிறோம். இன்று நாம எல்லோரும் விரதம் இருந்து சாப்பாடு சாப்பிடலாமண்ணே!" என்று கொண்டு வந்த சாப்பாட்டை எல்லா நரிகளுக்கும் நடுவில் வைத்தது.

மறுபடி ஒரு நரியானது "அண்ணே, அண்ணே! பொழுதுக்கும் விரதம் இருக்கிறோம் அல்லவா? இந்த சாமான்களையெல்லாம் எடுத்து கையில் வைத்துக் கொண்டு விரதம் இருக்கலாம்" என்று சொல்லியது. அதைக் கேட்ட மற்ற நரிகள் எல்லாம் சேர்ந்து ஆளுக்குக் கொஞ்சம் சாப்பாட்டை எடுத்து கையில் வைத்துக் கொண்டது.

மறுபடி ஒரு நரி "அண்ணே, இந்த சாப்பாட்டை கையில் வைத்திருக்கிறதை விட வாயில்போட்டு அப்படியே வைத்துக் கொள்ளலாம் முழுங்கினால்தானே விரதம் குறைந்துவிடும்!" என்று சொன்னதும் எல்லா நரிகளும் சாப்பாட்டை வாயில் போட்டுக் கொண்டது.

மறுபடி ஒரு நரி "அண்ணே! எல்லோரும் சாப்பாட்டை வாயில் போட்டுக் கொண்டோம் அல்லவா? அதை (சாப்பாட்டை) முழுங்கியே விடலாம் அண்ணே!" என்றதும் எல்லா நரிகளும் வாயில் போட்டுவைத்திருந்த சாப்பாட்டை முழுங்கிவிட்டது. எல்லா நரிகளுக்கும் பசிதீர்ந்துவிட்டது.

பசிதீர்ந்தபின் எல்லா நரிகளும் சேர்ந்து "நாம் காட்டு மிருகமாக இருக்கிறதினாலே வீட்டுச் சாப்பாடு நம்மளுக்கு கிடைப்பதில்லை, நாம் வீடுகளில் போய் சாப்பிடவும் முடியாது!" என்று எல்லாநரிகளும் பேசிக் கொண்டது.

அப்போது முதலில் வீட்டுக்குப் போய் வந்த நரியானது மற்ற நரிகளை நோக்கி நான் வீட்டுக்குப் போய் நல்லா சாப்பிட்டு அடிபட்டு கஷ்டப்பட்டு வந்தேன் ஆகையால்

அடிபட்டு வந்த நரிக்கு இனி ராஜாப் பட்டம் வேண்டாம்! எனக்குப் பதிலாக இங்கிருக்கும் நரிகளில் யாரோ ஒருவர் ராஜாவாக இருங்கள்! என்று சொல்லியது.

அதைக் கேட்ட மற்ற நரிகள் எல்லாம் சேர்ந்து இது, ராஜா நரி! இது, மந்திரி நரி! இது, வீட்டு நரி! இது, கள்ளநரி! இது வங்கநரி! இப்படியாக ஆயிரக்கணக்கான நரிகளும் அவர்களின் பெயர்களை வைத்துக்கொண்டு காட்டில் வசிக்கிறதாம்.

அந்த நரிராஜாக்களை இப்போது இரவுடைய கூட்டம்! என்று சொல்வார்களாம்.

முற்றும்